# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண்.263/2015

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.சத்தியவதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரமூர்த்தி | வா.சா.–1 | |
| த/பெ. | சீனிவாசகன் | | |
| கிராமம் | பந்தல்குடி | தொழில் | |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 59 |

---

முதல் விசாரணை 09–07–2026

நான் இந்த வழக்கின் வாதியின் கணவர் ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கறிஞரால் படித்துக்காண்பித்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 11.03.2022ம் தேதிய வாதிக்கு அ.குருசாமி என்பவரால் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) அ.குருசாமி பெயரில் உள்ள பட்டா பட்டா எண்.849 வாதி பெயருக்கு மாறிய பட்டா மாறுதல் உத்தரவு அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.254/2015 பிராது நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு

செய்யப்படுகிறது.

4) 06.01.2013 ம் தேதிய வாதி பெயரில் தீர்வை ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 21.07.1994 ம் தேதிய குருசாமி அவர்களுக்கு சின்னச்சோலை என்ற செல்லத்தாய் அம்மாள் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 06.07.2026 ம் தேதிய வாதியின் பெயரில் உள்ள பட்டா பட்டா எண்.849 கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 08.07.2026 ம் தேதிய வாதி வீட்டிற்குரிய வீட்டுவரி ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 30.06.2026 ம் தேதிய வாதி வீட்டிற்குரிய மின்கட்டணரசீது கணினி நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S